26th March 1959]

SRI K. SATTANATHA KARAYALAR : இப்போது ஏற்பட்டிருக்கின்ற விலைவாசியின் உயர்வு காரணமாக பென்ஷன் தொகையையும் உயர்த்துவதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது உத்தேசமிருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இல்லை.

Sanskrit Education in Secondary Schools

* 1017 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சமஸ்கிருத மொழிக் கமிஷன் சிபாரிசின்படி இம்மாகாணத்தி லுள்ள செகண்டரி பள்ளிகளில் சம்ஸ்கிருத படிப்புக்கு கட்டாய வசதிகள் செய்து கொடுக்க உத்தேசமுண்டா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. VEDARATHNAM : ஸார், இப்போது செகண்டரி பள்ளிக் கூடங்களில் சமஸ்கிருத பாடங்கள் போதிக்கப்படுகின்றனவா ? இவ்விதம் சமஸ்கிருத பாடங்கள் சொல்லிக்கொடுத்து வருவதால் வேறு மொழி பயிலுகின்ற மாணவர்களுக்கு ஏதாவது பாதகம் ஏற்படுகிறதா ? அவ்வித மென்றால் அதற்கு அரசாங்கம் என்ன பரிகாரம் செய்யும் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது சில பள்ளிக் கூடங்களில் சமஸ்கிருதம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது சமஸ்கிருதம் அதிகமாக படிக்கின்ற மாணவர்கள் இல்லை என்று தெரிகிறது. மேலும் இப்போது நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற கல்வித் திட்டத்தின்படி மூன்று மொழி படிக்க வேண்டும் என்று இருக்கிறது. அதாவது ஒன்று பிரதேச மொழி, இரண்டாவது பிரதேச மொழியல்லாத இந்தி அல்லது இந்திய மொழி ஒன்று, மூன்றாவதாக ஆங்கிலம் அல்லது ஐரோப்பிய மொழி ஒன்று. இவ்விதம் ஏற்படுத்தியிருப்பதில் இந்தி எடுத்துப் பயிலுவதற்கு பதிலாக சமஸ்கிருதத்தை எடுத்துப் படித்துக் கொள்ளலாம்.

Height of buildings

* 1018 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state the permissible height of buildings in (i) the city (ii) Municipal towns; and (iii) Panchayats?

THE HON. SRI M. A. MANICKAVELU : (i) *Madras City*—The maximum height of buildings in Madras city under Building Rules is 60 feet. The Government have permitted the raising of this maximum to 100 feet and the necessary provision in this regard will be made in the Corporation Building Rules now under revision.

(ii) *Municipal Towns.*—In municipal towns the height of buildings is decided with reference to the width of the streets immediately in front of the building. The height of a building shall not generally exceed one-and-a-half times the width of the street